# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.101/2022

### அ.சா. 7 (LW 12)

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **திரு. வீரமணி** | **தொழில்** | |
| **த/க பெயர்** | மகுடீஸ்வரன் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலூகா** | | **தேதி** | **11.02.2026** |

1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 ,2 எதிரிகள் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது வள்ளுவர் நகரில் குடியிருந்து வருகிறேன். ஓட்டுனராக பணிசெய்து வருகிறேன். என்னுடைய பெயர் வீரமணிகண்டன்.. என்னை வீரமணி என்று அழைப்பார்கள். இவ்வழக்கில் இறந்த பன்னீர் செல்வத்தை தெரியும். கடந்த 06.05.2021 அன்று என்னை ராஜ்குமார்என்பவர் என்னை தொலைபேசியில் அழைத்து சண்டை ஏற்பட்டு விட்டது என்றும் உடனே எனது வாகனத்தை எடுத்துக் கொண்டு புங்கம்பாடி பிரிவிற்கு செட்டியார் ஓட்டலுக்கு வருமாறு என்னை அழைத்தார்கள். நான் அங்கு சென்றேன். அப்போது பன்னீர்செல்வம் செட்டியார் ஓட்டலில் மயக்கநிலையில் இருந்தார். அப்போது அவர் இரத் வாந்தி எடுத்தார். அப்போது பன்னீர் செல்வம், அவரது மகன், தங்கராஜ், ராஜ்குமார் ஆகியோர்கள் எனது வாகனத்தின் மூலம் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

1,2 **<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

நான் சென்று பார்த்த போது பன்னீர் செல்வம் இரத்த வாந்தி எடுத்ததாக போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு சுமார் 07.25 மணிக்கு வந்தேன். புதுரோட்டிலிருந்து சம்பவ இடத்திற்கு வந்தேன்.

**<u>மறுவிசாரணை – இல்லை.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.02.11 19:04:20 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.